[1991 சனவரி 22

(இ) நாகர்கோவில் மாவட்ட நீதிபதி—வழக்கறிஞர்கள் பிரச்சினையையொட்டி வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப் புறக்கணிப்பதால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் மாவட்ட நீதிபதி அவர்களைக் கண்டித்து, ஏறத்தாழ மூன்று மாதகாலமாக வழக்கறிஞர்கள் நாகர்கோவில் நீதிமன்றங்களிலே எந்தக் கோர்ட்டுக்கும் போவதில்லை. அது தொடர்பாக மாவட்டத்தில் இருக்கின்ற தக்கலை, இரணியல், குளித்தலை போன்ற கோர்ட்டுகளிலேயும் ஏறத்தாழ 10,20 நாட்களாக எந்த வழக்கறிஞரும் போவதில்லை. ஏறத்தாழ மூன்று மாதகாலமாக வழக்கறிஞர்கள் கோர்ட்டுக்குப் போகாது இருக்கிற காரணத்தால், 'Anticipatory Bail' எந்த வகையிலும் வாங்க முடியாமல் பொதுமக்கள் அவதிப் படுகிறார்கள். மேலும், வழக்கறிஞர்கள் சங்கம், ரிஜிஸ்ட்ராரையும், ஹைக்கோர்ட் ஜட்ஜையும் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். அவர்களும் நீங்கள் ஒரு அளவுக்காவது கோர்ட்டுக்குச் செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கிணங்க, அவர்கள் 'Bench and Bar discussion' வைத்துக் கொண்டார்கள்.

வழக்கறிஞர்கள் மாவட்ட நீதிபதியைப் பார்த்துப்பேசியும்கூட, அவர், உங்கள் வேலையைப் பார்த்துப் போங்கள். நான் இப்படித்தான் நடந்து கொள்வேன் என்று தரக்குறைவாகப் பேசிய பின்னர்தான், அந்த வழக்கறிஞர்கள் இப்போது உண்ணாவிரதம், நீதிமன்றத்தின் முன்னால் 14 நாட்களாக இருக்கிறார்கள். மூன்று மாதகாலமாக இந்த நீதிமன்றத்திற்கு வழக்கறிஞர்கள் போவதில்லை. நாகர்கோவில் மாவட்ட நீதிமன்றம் மட்டுமல்ல; மாவட்டத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களும் இதனால் இயங்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களினுடைய கவனத்திற்கும், வழக்கறிஞர்கள் சங்கம் கொண்டு வந்திருக்குமென்று நம்புகிறேன். மேலும், ஹைக்கோர்ட் நீதிபதிக்கு முன்னாலே பேச்சுவார்த்தைகள் நடந்த பின்னாலும்கூட, எந்த நடவடிக்கையும் இதுவரையில் எடுக்காமல் இருப்பது, நிச்சயமாக, தவறானது மட்டுமல்ல; ஒரு நல்ல எண்ணமல்ல என்பதற்காக நான் இந்தக் கருத்தை நம்முடைய இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்கிறேன். நிச்சயமாக அவர்களுடைய கோரிக்கைகளை எந்தக் காரணத்தினாலும், அந்த மாவட்டத்தினுடைய தனுஷ்கோடி என்கிற நீதிபதி ஒப்புக்கொள்ளமாட்டார். நானும் அவருடன் பேசினேன். முடியாது என்கிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், உடனடியாக அந்த நீதிபதியை மாற்றிவிட்டால், அந்தப் பிரச்சினை ஓய்ந்து விடும். ஆகை

யினால் அமைச்சர் அவர்கள் உடனடியாக அதற்கு ஆவன செய்ய வேண்டும். அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்பி அமைகிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் இருக்கிற வழக்கறிஞர்கள் கடந்த இரண்டு மாத காலமாக, வழக்கறிஞர்களுக்கும் மாவட்ட நீதிபதிக்கும் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக, கோர்ட்களைப் புறக்கணித்து வருகிறார்கள். இந்த மாதம் முதல் குமரி மாவட்டத்தில் உள்ள எல்லா கோர்ட்டுகளுமே வழக்கறிஞர்களால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. எனவே அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். வழக்கறிஞர்கள் தங்களுடைய பிரச்சினைகளுக்காக நீண்ட காலமாகவே போராடி, அரசுக்கும் உயர் நீதிமன்றத்திற்கும் முறையிட்டும் கூட, இதுநாள் வரையில் அந்தப் பிரச்சினை முடிக்கப்படாத காரணத்தால் வழக்கறிஞர்கள் பாதிப்பு, பொதுமக்கள் பாதிப்பு, சட்ட ஒழுங்குப் பிரச்சினை என்று பல பிரச்சினைகள் ஏற்படுவதற்கு காரணமாக இது அமைந்திருக்கிறது. எனவே இது உயர் நீதிமன்றம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும்கூட மக்கள் பாதிக்கப்படுவதால் அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டு உடனடியாக அதற்குத்தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

10-35 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் மாவட்ட நீதிபதியாக திரு. தனுஷ்கோடி அவர்கள் பணியாற்றுகிறார்கள். நாகர்கோவில் வழக்கறிஞர்கள் சங்கம் அவர் மீது சில குறைபாடுகளைச் சொல்லி, குற்றச்சாட்டுகளைச் சொல்லி அரசுக்கும் தெரிவித்தது. உயர்நீதிமன்றத்திற்கும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். வழக்கறிஞர் மன்ற நண்பர்கள் சுமார் 2 வாரங்களுக்கு முன்பு என்னைச் சந்தித்தபோதும் உயர்நீதிமன்றத்தோடு தொடர்பு கொண்டு, இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. வழக்கறிஞர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியையும் சந்தித்து இருக்கிறார்கள். உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியும் அதன்மீது நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்ததாக எனக்கு தகவல் தரப்பட்டிருக்கிறது.

இப்போது நிலைமை என்னவென்றால் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களும் அந்த மாவட்டத்திற்குப் பொறுப்பேற்று இருக்கின்ற மாவட்ட நீதிபதி அவர்களை அழைத்துச்

சொல்லி இருக்கிறார்கள். மூன்று நாட்களுக்குள்ளாக அந்த வழக்கறிஞர்கள் சங்க நண்பர்களோடு பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதுமட்டு மல்லாமல் அந்த நீதிபதியைப்பற்றி ஜுடிசியல் விஜிலன்ஸ் மூலமாக ஒரு அறிக்கை கேட்டிருப்பதாகவும் சொல்லியிருக் கிறார்கள். அந்த அறிக்கையை எதிர்பார்த்துக்கொண்டிருக் கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வு களை மதித்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

(ஈ) எந்தக் கட்சியையும் சாராதவர்கள் என்று சில உறுப்பினர்கள் குறித்து பேரவைத் தலைவர் 21—1—1991 ஆம் நாளன்று அளித்த தீர்ப்பு பற்றி.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சட்டமன்றக் கூட்டத்தின்போது தாங்கள் இங்கே தீர்ப்பளிக்கிறபோது போதிய நேர அவகாசம் இல்லாத காரணத்தால் முழுமையாக எங்களால் எங்களுடைய நிலையை விளக்க இயலவில்லை. மேலும் எதிர்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் போன்ற இன்னும் சில சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்தின் நேரத்தை வீணாக்கவேண்டாம், எழுதிக் கொடுத்து விடுங்கள் என்று சொன்ன ஆலோசனைகளின் பேரிலும் தாங்கள் கேட்டுக்கொண்டதின் பேரிலும் எங்களுடைய நிலையை முழுமையாக விளக்கி நேற்று உங்களுக்கு நானும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், திரு. எஸ். டி. உகம்சந்த் ஆகியோரும் கடிதம் தந்து இருக்கிறோம். அதன்மீது தங்களுடைய முடிவை, தீர்ப்பை இன்றைக்கு நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பரிசீலனையில் உள்ளது. இன்று பகல் 1.15 மணிக்கு மூவரும் என்னுடைய அறையில் சந்தித்து நேரில் மற்ற விளக்கங்களை அளிக்கவும். அதன்பிறகு தீர்ப்பளிக்கப்படும்.

(உ) கர்நாடக அரசு காவிரி நீர் விடாததால் விவசாயிகளும் உணவு உற்பத்தியும் பாதிக்கப் பெற்றுள்ளது குறித்து.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் குறிப்பாகத் தமிழகத்தில் காவிரிப் பாசனத்திற்குத் தண்ணீர் விடுவது சம்பந்தமாக பல்வேறு பட்ட தகவல்களும், செய்திகளும் வந்துகொண்டிருக்கின்றன. இன்றைக்குக் காவிரிப் பாசனப்பகுதி விவசாயம் நிச்சயமற்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அதுவும் கடைமடைப் பகுதியில் இருக்கக்கூடிய கிராமங்களும், தாலுகாக்களும் மானா வாரிச் சாகுபடி செய்யக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்